ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2269/11 - 2022 පෙබරවාරි මස 28 වැනි සඳුදා - 2022.02.28
*2269/11 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 9/2016* (II)

***2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்***

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*கலாநிதி* ***கெஹெலிய ரம்புக்வெல்ல,***
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2022,* பெப்புருவரி *28.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் மருந்துகள் (500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளுக்கு/ வில்லைகளுக்கு விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* மருந்தின் தன்மை ஒரு மாத்திரையாகவிருப்பினுஞ்சரி அல்லது வில்லையாகவிருப்பினுஞ்சரி, ஐந்நூறு மில்லிகிராம் (500 மிகி) வீரியத்தைக் கொண்டதும் இனப்பெயரொன்றாகவுள்ளதுமான ஓர் 500 மிகி பரசிட்டமோல் மாத்திரையின்/வில்லையின் அதிகபட்ச சில்லறை விலையானது இரண்டு ரூபா முப்பது சதம் (ரூபா 2.30) ஆதல் வேண்டும்.

1A - G 36227 — 15 (2022/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. ஓர் 500 மிகி பரசிட்டமோல் மாத்திரையின்/வில்லையின் அதிகபட்ச சில்லறை விலையானது, 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளின்/வில்லைகளின் இனப்பெயரின் எல்லா வணிகப்பெயர்களுக்கும் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

4. விற்பனை நோக்கத்துக்காக 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளை/வில்லைகளை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலாளர், பல்மருத்துவர், விலங்கு அறுவை மருத்துவர் ஒருவர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒன்று அல்லது ஆள் ஒருவர், 2 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குமேலாக அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலைக்குமேலாக அத்தகைய 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளை/வில்லைகளை விற்பனை செய்தலாகாது.

5. ஒர் 500 மிகி பரசிட்டமோல் மாத்திரையை/வில்லையை விற்பனைசெய்கின்ற அல்லது விற்பனைக்கு முன்வைக்கின்ற 4 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும் அல்லது ஒவ்வொரு நிறுவனமும், அத்தகைய விற்பனையின்மேல், 500 மிகி பரசிட்டமோல் மாத்திரையின்/வில்லையின் தோதான வணிகப்பெயரையும் விலையையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

6. (1) இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியன்று, 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்குக் குறைவாகவுள்ளதும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்டவாறாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின்மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகளின் கீழானதுமான மீளாய்வுசெய்யப்பட்டவொரு சில்லறை விலைக்கு 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளை/வில்லைகளை விற்பனைசெய்கின்ற ஓர் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் அத்தகைய மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை முப்பத்தைந்து சதவீதத்தினால் (35%) விகிதாசாரப்படி அதிகரிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், 500 மிகி பரசிட்டமோல் மாத்திரை/வில்லை ஒன்றின் மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையின் அத்தகைய அதிகரிப்பு 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விஞ்சுதலாகாது.

(2) விற்பனை நோக்கத்துக்காக 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளை/வில்லைகளை உடைமையில் வைத்திருக்கின்ற வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலாளர், பல்மருத்துவர், விலங்கு அறுவைமருத்துவர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளின்/வில்லைகளின் விலையை அதிகபட்ச சில்லறை விலையில் அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையில், இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையில் பேணுதல் வேண்டும்.

7. பரசிட்டமோலின் ஏதேனும் மருந்தின் தன்மை அல்லது வீரியம் மற்றும் பரசிட்டமோலின் அத்தகைய மருந்தின் தன்மையின் அல்லது வீரியத்தின் அதிகபட்ச சில்லறை விலையானது 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படாதவிடத்து, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையானது அத்தகைய மருந்தின் தன்மையில் அல்லது வீரியத்தில் பரசிட்டமோலுக்கான விலையை நிர்ணயித்தல் வேண்டும்.

8. எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், 500 மிகி பரசிட்டமோல் மாத்தரையின்/வில்லையின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது, உற்பத்திசெய்யப்பட்ட அல்லது சந்தையில் கிடைக்கக்கூடியதான கையிருப்பில், இயன்றளவு விரைவாக, 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை அச்சிடுதல் அல்லது குறியிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகபட்ச சில்லறை விலை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலை, இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்படும் திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர் 500 மிகி பரசிட்டமோல் மாத்திரையின்/வில்லையின் வர்த்தகப் பொதியின்மீது அல்லது சுட்டுத்துண்டின்மீது அச்சிடப்படுதல் அல்லது குறியிடப்படுதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.

10. விற்பனை நோக்கத்துக்காக 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளை/வில்லைகளை உடைமையில் வைத்திருக்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத்தொழிலாளர், பல்மருத்துவர், விலங்கு

அறுவைமருத்துவர் ஒவ்வொருவரும், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் 500 மிகி பரசிட்டமோல் மாத்திரைகளின்/ வில்லைகளின் அதிகபட்ச சில்லறை விலையை அல்லது மீளாய்வுசெய்யப்பட்ட சில்லறை விலையை, இவற்றுள் எவ்விலை குறைவாகவுள்ளதோ அவ்விலையை வெளிக்காட்டிவைத்தல் அவரது அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.

11. இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஒகத்து மாதம் 19 ஆந் திகதிய 2241/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்டவாறாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 2123/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் மருந்துகள் (விலைகளின்மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள், அதன் அட்டவணையின் அதன் 32 ஆம் விடயத்தை நீக்கிவிடுவதன்மூலம் அவ்வட்டவணையில் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

12. இவ்வொழுங்குவிதிகளில் -

“பல்மருத்துவர்” என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“மருத்துவத்தொழிலாளர்” என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“ஆள்” என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;

“தனியார் மருத்துவ நிறுவனம்” என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

“விலங்கு அறுவைமருத்துவர்” என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு அறுவைமருத்துவர்கள் மற்றும் மருத்துவத்தொழிலர்கள் சட்டத்தின்கீழ் விலங்கு அறுவைமருத்துவர் அல்லது விலங்கு மருத்துவத்தொழிலாளர் ஒருவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஓர் ஆள் என்று பொருள்படும்.

EOG 02-0693

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.